| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் - எட்டாம் வகுப்பு | | | |
| தமிழ் – அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024 - 2025 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | | | |
| **பி - 1** | **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | | **11 x 1 = 11** |
| 1 | அ | மரபு | 1 |
| 2 | இ | அச்சுக்கலை | 1 |
| 3 | இ | இடமெங்கும் | 1 |
| 4 | ஆ | அச்சம் | 1 |
| 5 | ஆ | ஓடை | 1 |
| 6 | அ | அமராவதி | 1 |
| 7 | ஆ | மதுரை | 1 |
| 8 | ஈ | பார்த்த | 1 |
| 9 | ஈ | வித்துகள் | 1 |
| 10 | இ | பனையோலைகள் | 1 |
| 11 | அ | வேற்றுமைத்தொகை | 1 |
| **பி- 2** | **பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** | | **4 x 1 = 4** |
| 12 | ஆ | தொல்காப்பியம் | 1 |
| 13 | ஆ | காற்று | 1 |
| 14 | ஈ | ஐம்பூதம் | 1 |
| 15 | ஆ | தொல்காப்பியர் | 1 |
| பகுதி - II | | | |
| **பி 1** | **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**<br>**21 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்** | | **4 x 2 = 8** |
| 16 | விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க. ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | | |
| அ | இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் யாவை? | | 1 |
| ஆ | உலகம் எவற்றால் ஆனது ? | | 1 |
| 17 | மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக் கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது. | | 2 |
| 18 | சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர், மாய வித்தையா? எரிக்க வந்த தீயா?<br>உயிரைப் பறிக்க வந்த எமனா?<br>தமக்கு இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ? என எண்ணி, அலைந்து, குலைந்து நடுங்கினர். | | 2 |
| 19 | காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை (அமராவதி). | | 2 |
| 20 | இந்தியாவின் விடுதலையை, பகத்சிங் கனவாகக் கண்டார். | | 2 |
| 21 | இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து<br>அதனை அவன்கண் விடல்.<br>- திருவள்ளுவர் | | 2 |

| | | |
|---|---|---|
| பி 2 | **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** | **5 x 2=10** |
| 22 | உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர். | 2 |
| 23 | பொருள் முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். அவை: பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும். | 2 |
| 24 | வல்லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும், மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும்.இதனைச் சந்திப்பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர். | 2 |
| 25 | *சரியான மரபு சொல்லால் நிரப்புக.* | |
| அ | தண்ணீர் குடி | 1 |
| ஆ | சுவர் எழுப்பு | 1 |
| 26 | *கலைச்சொற்கள் தருக.* | |
| அ | Thread – நூல் | 1 |
| ஆ | Tax – வரி | 1 |
| 27 | *தொடர்களை மாற்றுக.* | |
| அ | என்னே, காட்டின் அழகு ! | 1 |
| ஆ | அதிகாலையில் துயில் எழு. | 1 |
| 28 | *எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.* | |
| அ | 6 - சு | 1 |
| ஆ | 2 - உ | 1 |
| | பகுதி - III | |
| பி 1 | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** | **2 x 3= 6** |
| 29 | மூங்கிலைக் கொண்டு பலவகையான கைவினைப் பொருள்களைச் செய்யலாம். மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், பூக்கூடை, கட்டில், புல்லாங்குழல் போன்றவை மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் ஆகும்.<br>பிறந்த குழந்தைக்குத் தொட்டில் முதல், இறந்தவரை சுமந்து செல்லும் பாடை வரை மூங்கில் பயன்படுத்தப்படுகிறது. | 3 |
| 30 | ❖ தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு ஆகும்.<br>❖ அதுவே இயற்கை முறை ஆகும்.<br>❖ வேறு பல மொழிகளை நேரமும் ஓய்வும் கிடைக்கும் பொழுது பயிலலாம்.<br>❖ ஆனால் முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும்<br>❖ தாய்நாடு என்பது தாய்மொழியைக் கொண்டே பிறப்பதாகும். | 3 |
| 31 | **உரைப்பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக.** | |
| அ | மாங்கனி நகரம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது சேலம். | 1 |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| ஆ | நெல். பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி | 1 |
| இ | ஜவ்வரிசி | 1 |
| பி -2 | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**<br>**34 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்** | 2 x 3 = 6 |
| 32 | வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை<br>மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கூரை | 3 |
| 33 | வீரத்தைப் போற்றாமல் அறிவை கூர்மையாக்கி வாழவேண்டும்.<br>நம் மதிப்பை இழக்காமல் திறமையைக் காட்டி வாழ வேண்டும்.<br>ஆத்திரம் நம் புத்தியை அழித்துவிடும். அதனால் அழிக்க பகைவனே வந்தாலும் அன்பு காட்டுதல் வேண்டும்.<br>மன்னிக்கத்தெரிந்த மனிதனின் உள்ளம், இறைவன்வாழும் கோயிலாகும்.<br>மன்னிக்கத்தெரியாதவனுக்கு வாழ்க்கையின் பாதை தெரியாமல் போய்விடும்.<br>மனிதனின் வாழ்நாள் சிலகாலம், அதனால் செருக்கு இல்லாமல் புத்தியோடு வாழ வேண்டும் என கவிஞர் சோமு அவர்கள் கூறுகிறார். | 3 |
| 34 | **வருமுன் காப்போம்**<br>உடலின் உறுதி உடையவரே<br>உலகில் இன்பம் உடையவராம்;<br>இடமும் பொருளும் நோயாளிக்கு<br>இனிய வாழ்வு தந்திடுமோ?<br>சுத்தம் உள்ள இடமெங்கும்<br>சுகமும் உண்டு நீயதனை<br>நித்தம் நித்தம் பேணுவையேல்<br>நீண்ட ஆயுள் பெறுவாயே!<br>காலை மாலை உலாவிநிதம்<br>காற்று வாங்கி வருவோரின்<br>காலைத் தொட்டுக் கும்பிட்டுக்<br>காலன் ஓடிப் போவானே!<br>- கவிமணி தேசிக விநாயகனார் | 3 |
| | (அ,ல்லது) | |
| | **பாடறிந்து ஒழுகுதல்**<br>ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்<br>போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை<br>பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்<br>அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை<br>அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்<br>செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை<br>நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை<br>முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல் | |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | |
|---|---|---|
| | பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்<br>- நல்லந்துவனார் | |
| பி 3 | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** | 2x3=6 |
| 35 | தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும். செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினையெச்சம். எ.கா.எழுதி வந்தான்.<br>காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினையெச்சம். எ.கா. மெல்ல வந்தான். | 3 |
| 36 | பொற்றொடி வந்தாள் - பொன்னால் செய்த வளையல் அணிந்த பெண் வந்தாள் என்பது பொருள். இவ்வாறு வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுள் அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை எனப்படும். | 3 |
| 37 | நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமின்றி இணைவது இயல்புப் புணர்ச்சி ஆகும்.<br>(எ.கா.) தாய்+மொழி - தாய்மொழி. | 3 |
| IV | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** | 5x5=25 |
| 38 | பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன. அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.<br>கோணக்காற்றால் கூரைவீடு முதல் மாடி வீடு வரை சூறையாடப்பட்டதாக நாட்டுப்புறப்பாடல் கூறுகிறது. | 5 |
| | (அல்லது) | |
| | நாம் வாழும் இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.<br>காலை மாலை நடைப்பயிற்சி செய்தல் வேண்டும்.<br>தூய காற்றைச் சுவாசித்தல் வேண்டும்.<br>குளித்துவிட்டே உணவருந்த வேண்டும்.<br>நன்றாக இரவில் உறங்க வேண்டும்.<br>அளவாக உண்ண வேண்டும்.<br>தூய்மையான காற்றும்,நல்ல குடிநீரும்,பசித்தப்பின் உண்ணும் உணவும் நம்மை நலமுடன் வாழ வைக்கும் முறைகள் ஆகும். | 5 |
| 39 | நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம்<br>எறையூர்-36.<br>09.12.2024<br>இனிய நண்பா,<br>நான் நலமாக இருக்கிறேன். நீ நலமா? வீட்டில் உள்ளவர்களின் நலனைத் தெரியப்படுத்தவும்.<br>சுதந்திர தினத்தை ஒட்டி நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டியில், மாவட்டத்தில் நீ முதலாவதாக வந்ததைக் கேள்வியுற்றேன். மிக்க மகிழ்ச்சி. நீ எப்பொழுதும் சுறுசுறுப்பாய் இருப்பாய். உன்வேகம் உன்னை ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெறச் | 5 |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | செய்துவிட்டது. நீ ஓடும் பொழுது நான் காணாததே எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. உன் திறமையாலும், விடா முயற்சியாலும் மாநில அளவிலும், ஏன், தேசிய அளவிலும் பங்கு பெற்று முதலாவதாக வரவேண்டும் என்று வாழ்த்துகிறேன். அரையாண்டு விடுமுறையில் கட்டாயம் என் வீட்டிற்கு வரவேண்டும். நன்றாகப் படிக்கவும். மற்றவை நேரில் சந்திக்கும்பொழுது பார்க்கலாம். பதில் கடிதம் போடவும்.<br>இப்படிக்கு.<br>உன் அன்பு தோழன்<br>செ.அருண்.<br>உறைமேல் முகவரி:<br>பெறுநர்<br>ந.கண்ணன்,<br>16, பாரதியார் தெரு,<br>நேரு நகர்,<br>பெரம்பலூர் - 16. | |
| | (அல்லது) | |
| | இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம்<br>அனுப்புநர்<br>ச. முத்து,<br>த/பெ. சம்பத் குமார்,<br>34, குறிஞ்சி நகர்<br>கிழுமத்தூர்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621108.<br>பெறுநர்<br>உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.<br>மதிப்புக்குரிய அய்யா,<br>பொருள்: இருப்பிடச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக.<br>வணக்கம், நான் ஆடுதுறை, அரசு மேல் நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கின்றேன். நாங்கள் 34, குறிஞ்சி நகர், கிழுமத்தூர், பெரம்பலூர் மாவட்டம் என்ற முகவரியில் பத்து ஆண்டுகளாக வசித்து வருகின்றோம். எனக்கு அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றது. ஆகவே இத்துடன் குடும்ப அட்டை நகலும், ஆதார் அட்டை நகலும் இணைத்துள்ளேன். தாங்கள் எனக்கு இருப்பிடச் சான்றிதழ் வழங்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.<br>நன்றி<br>இடம்: கிழுமத்தூர் இப்படிக்கு,<br>நாள் : 09.12.2024 தங்கள் உண்மையுள்ள,<br>ச. முத்து. | 5 |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | |
|---|---|---|
| | உறைமேல் முகவரி:<br>பெறுநர்<br>உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் | |
| 40 | மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக.<br>அ) ஆயிரங்காலத்துப் பயிர் - நீண்டகாலமாக இருப்பது<br>ஆ) கல்லில் நார் உரித்தல் - இயலாத செயல்<br>இ) கம்பி நீட்டுதல் - விரைந்து வெளியேறுதல்<br>ஈ) கானல் நீர் - இருப்பது போல் தோன்றும் ஆனால் இருக்காது<br>உ) கண்ணை மூடிக்கொண்டு - ஆராய்ந்து பாராமல் | 5 |
| 41 | வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக.<br>அ) போனான் - போ ஆ) வருக - வா<br>இ) கேட்டார் - கேள் ஈ) சென்றனர் - செல்<br>உ) பேசினாள் - பேசு | 5 |
| 42 | வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திப் பத்து சொற்களை உருவாக்குக<br>கருமை, கடுமை, பல், கரும்பு, கடமை, வேல், பழமை,<br>புல், களை, கடம், நாற்று, வித்து, வேற்றுமை, நாடகம்,<br>வேழம், கல், நாம், கற்பு, புதுமை, வேம்பு, நாடு | 5 |
| V | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3 x 8 = 24 | |
| 43<br>அ | தமிழரது நிலம் நிறைந்த பண்பாடுகளும் தத்துவங்களும் அடங்கியது. நோய்கள் எல்லாம் பேய்பிசாசுகளால் வருகின்றன: பாவ, புண்ணியத்தால் வருகின்றன என்று உலகத்தின் பல பகுதிகளில் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில், தமிழர் தத்துவங்களான சாங்கியம். ஆசீவகம் போன்றவை உடலுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டறிந்து, உடலில் ஐம்பூதங்களினால் ஏற்படும் மாற்றங்களை விளக்கின.<br>நோயை இயற்கையில் கிடைக்கும் பொருள்கள். அப்பொருள்களின் தன்மை. சுவை இவற்றைக்கொண்டே குணப்படுத்த முடியும் என்ற உண்மையை மிகத்தெளிவாக விளக்கினர். தமிழர் மருத்துவம் பண்பாட்டுக்கூறாக ஆகும்போது நாட்டு வைத்தியமாகவும் பாட்டி வைத்தியமாகவும் மரபுசார்ந்த சித்த வைத்தியமாகவும் உணவு சார்ந்த மருத்துவமாகவும். பண்பாடு சார்ந்த மருத்துவமாகவும் விரிந்திருக்கிறது. | 8 |
| | (**அல்லது**) | |
| ஆ | ❖ அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில் முறையில் உருவாக்கும் கலையைக் கைவினைக்கலை என்று அழைப்பர்.<br>❖ தமிழகத்தில் பழங்காலந்தொட்டே இக்கலை வளர்ந்திருக்கிறது. கைவினைக்கலைக்கு சான்றாக இருப்பது, மண்பாண்டங்கள் ஆகும்.<br>❖ சிந்துசமவெளி, ஆதிச்சநல்லூர் செம்பியன் கண்டியூர் கீழடி போன்ற பகுதிகளில் செய்த அகழ்வாய்வில் மண்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.<br>❖ களிமண்ணால் உருவாக்கப்படும் மண்பாண்டங்கள், சுடுமண் சிற்பங்கள் போன்றவை | 8 |

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

முதன்முதலில் செய்யப்பட்ட கைவினைப் பொருள்கள் ஆகும்.

- ❖ மூங்கிலால் செய்யப்படும் பொருட்கள், கோரைகளால் செய்யப்படும் பொருட்கள். பிரம்பால் செய்யப்படும் பொருட்கள், பனையோலையால் செய்யப்படும் பொருட்கள் இவையனைத்தும் கைவினைப் பொருட்கள் ஆகும்.இதனால் இயற்கைக்கு யாதொரு பாதிப்பும் நிகழாது.
- ❖ மரப்பொம்மைகள்,சந்தனமாலைகள்சங்கு. இதுமட்டுமல்லாது. கிளிஞ்சல்களால் செய்யப்படும் காகிதப்பொம்மைகள், பொருட்கள் அத்தனையும் கைவினைப் பொருட்கள் ஆகும்.
- ❖ அரசு கைவினைக் கலைஞர்களுக்கு ஊக்கம் அளித்து வருகிறது. கைவினைக் கலைஞர்களுக்கான சிறுதொழில் கடன் வசதியும் அளித்து வருகிறது.
- ❖ அரசு அழகும், நலமும் வாய்ந்த இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களை வாங்குவோம்! கைவினைக் கலைக்கு உயிர் தருவோம்!

44 **வெட்டுக்கிளியும் சருகுமானும்**

அ **வெட்டுக்கிளியும் சருகுமானும்**

குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் பச்சை வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. அது ஒரு வாயாடி. ஒரு மாலை நேரம் கூரன் என்ற பெண் சருகுமானை வெட்டுக்கிளி பார்த்தது."என்ன கூரன் பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்குமாய் வேகமாக ஓடுகிறாய்?" அதற்கு சருகுமான், 'காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன், இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக்கொண்டு வருகிறது.

விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்ததும் அதன் அடியில் கூரன் ஒளிந்து கொண்டது. தலையை மட்டும் தூக்கி வெட்டுக்கிளியை எச்சரித்தது. பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே என்றது.

**வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும்**:

கூரனைத் தேடிக் கொண்டு பித்தக்கண்ணும் ஓடைப் பக்கம் வந்தது. வெட்டுக்கிளி அதன் கண்ணில் பட்டதும் அதைப் பார்த்து உறுமியது. 'கூரன் இங்கு வந்தாளா?" என்றது. வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தலைக்கு ஏறியது. பித்தக்கண்ணுவை இவ்வளவு பக்கத்தில் பார்ப்பது இதுதாள் முதல்முறை. பித்தக்கண்ணுவைப் பார்த்ததால் ஏற்பட்ட பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது. அதைக்கண்ட பித்தக்கண்ணு. கூரன் பதுங்கி இருந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. அங்கு புனுகுப் பூனையின் துர்நாற்றமே எட்டியது. அதனால் உறுமிக் கொண்டே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேறு பக்கம் சென்றது. 8

**உயிர்பிழைத்த கூரன்**:

கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தை ஏறக்குறையக் காட்டிக் கொடுத்ததற்காக வெட்டுக்கிளி மீது அதற்குக் கோபமான கோபம், அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது. 'இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்' என்று கூறிக் காட்டுக்குள் ஓடியது.

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | **வெட்டுக்கிளியின் பயம்**<br>அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது. இதனால் தான் இன்றும் கூட வெட்டுக் கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்க முடியாமல் குதித்த வண்ணமுள்ளன. | |
| | (அல்லது) | |
| ஆ | **அறிவுசால் ஔவையார்**<br>❖ அதியமானின் அரண்மனையில் ஔவையார் நீண்டகாலம் தங்கியிருந்தார். அப்போது தொண்டைமான். அதியமான் இருவருக்கும் நடக்கவிருந்த போரைத் தடுத்து நிறுத்தியதைப் பற்றி இக்கதையில் காண்போம்.<br>❖ ஒருநாள் அதியமான் காட்டுவளத்தைக் காணச் சென்றான். திரும்பி வரும்போது அரிய நெல்லிக்கனியைக் கொண்டு வந்து ஔவையாரிடம் கொடுத்தான். சுவைத்துப் பார்த்த ஔவையார் இதுவரை இவ்வளவு சுவையுள்ள கனியை தான் சுவைத்ததே இல்லை என்று கூறினார்.<br>❖ அமைச்சர் "இது அரிய நெல்லிக்கனி. நமது வீரர்களால் பறிக்க இயலவில்லை. நம் மன்னரே மலையுச்சியில் இருந்த மரத்தில் ஏறிப் பறித்தார்" என்று கூறினார். மேலும் இக்கனியை உண்டவர்கள் நோய் நொடியின்றி வாழ்வார்கள்" என்றும் கூறினார்.<br>❖ அதனைக் கேட்ட ஔவையார் வியந்து அதியமானிடம் "நீ உண்ணாமல் எனக்கு ஏன் கொடுத்தாய்?" என்று கேட்டார். அதற்கு அதியமான் "என்னைப் போன்ற அரசன் இறந்து போனால் வேறு ஒருவர் அரசராகிவிடுவார். ஆனால் உங்களைப் போன்ற அறிவிற்சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால், அந்த இழப்பை ஈடு செய்ய முடியாது" என்று கூறினான். அதியமான் தமிழ் மீது கொண்ட பற்றினைக் கண்டு ஔவையார் மனமுருகினார்.<br>❖ மறுநாள் அதியமானின் கவலைகொண்ட முகத்தைக் கண்டு ஔவையார் காரணம் கேட்டார். அதியமானும் "தொண்டைமான் போர்ச் செய்தி அனுப்பியுள்ளான்" என்று கூறினான். ஔவையார் அதியமானிடம் "எதற்கும் அஞ்சாத நீ போரைக் கண்டு அஞ்சலாமா?" என்று கேட்டார்.<br>❖ அதியமான் தான் போரைக் கண்டு அஞ்சவில்லை என்றும் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு அஞ்சுவதாகவும் கூறினான். அதியமானின் உள்ளத்தை அறிந்த ஔவையார், அதியமானின் ஒப்புதலோடு தொண்டைமானைக் காணச் சென்றார்.<br>❖ தொண்டைமானின் அரண்மனையில் படைத் தலைவருடன் உரையாடிக் கொண்டிருந்தான், அப்போது படைத்தலைவர் "அதியமான் நம் படையின் பெருக்கத்தைக் கண்டு அதிர்ந்துபோய் சமாதானம் வேண்டிப் புலவர் ஒருவரைத் தூது அனுப்பியுள்ளார்" என்று கூறினான்.<br>❖ தொண்டைமான் ஔவையாரை வரவேற்றான் போர்க்கருவிகள் நிறைந்த படைக்கலக் கொட்டிலைப் பார்க்க அழைத்துச் சென்றான். அப்படைக் கருவிகளைப் பார்த்து ஔவையார் அளவுக்கதிகமான கருவிகள், அழகாக அடுக்கி வைத்திருக்கும் முறை, புத்தம் புதியனவாய் நெய் பூசப்பெற்று மாலையும் மயில் தோகைகளும் அணிவிக்கப்பட்டு அழகாக உள்ளன" என்றார். | 8 |

| | | |
|---|---|---|
| | ❖ மேலும், 'அதியமான் எப்போதும் போர் புரிந்து கொண்டே இருப்பதால் அவனது படைக்கருவிகள் பகைவர் உடலைத் துளைத்த குருதிக் கறைகளுடன் நுனி ஒடிந்தும் கூர் மழுங்கியும் கொல்லனின் உலைக் களத்தில் கிடக்கின்றன" என்று கூறினார்.<br>❖ ஔவையாரின் பேச்சில் இருந்த உட்பொருளை உணர்ந்த தொண்டைமான். 'தான் இதுவரை போர்க்களத்தைக் கண்டதில்லை என்றும், அதியமான் பல போர்களைக் கண்டுள்ளான் என்றுகூறி அதியமானுடன் போரிடப் போவதில்லை என்று முடிவெடுத்தான். இதனை அதியமானிடம் தெரிவிக்கும்படியும் கூறினான்.<br>❖ ஔவையாரின் அறிவு சார்ந்த செயலினால் இழப்புகளின்றி நாடும், நாட்டு மக்களும் காப்பாற்றப்பட்டனர். | |
| 45 | **நான் விரும்பும் கவிஞர்**<br>**முன்னுரை**<br>இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளி புதுமைக் கவிஞர், தேசியக் கவி, மகாகவி எனப் பாராட்டப்பட்டவர் நம் பாரதியாரே ஆவார். பாட்டுக்கொரு புலவனாய்த் திகழ்ந்த பாரதி தம் பாடல்கள் மூலம் மக்களிடையே தமிழ்ப்பற்று. விடுதலை உணர்வு ஆகியவற்றை வளர்த்தார்.<br>**பிறப்பும் இளமையும்**<br>பாரதியார் எட்டயபுரத்தில் 11.12.1882 ஆம் நாளில் பிறந்தார். இவரின் பெற்றோர் சின்னசாமி இலக்குமி அம்மையார் ஆவார். சிறிய வயதிலேயே கவிதை புனையும் திறமையைப் பெற்றார். தமது பதினோறாம் வயதில் பாரதி என்னும் பட்டம் சான்றோர்களால் வழங்கப்பட்டது.<br>**விடுதலைவேட்கை**<br>பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்றார். இப்படிப்பட்ட தம் உயர்ந்த பாரதம் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருப்பதை எண்ணி நெஞ்சு பொறுக்குதில்லையே என பாடினார், வெள்ளையரின் அடக்கு முறைக்கு அஞ்சாது விடுதலை உணர்வு மிக்க பாடல்களைப் பாடி மக்களைத் தட்டி எழுப்பினார்.<br>**ஒருமைப்பாட்டுணர்வு**<br>எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்திய மக்கள் என்றார். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே எனப் பாடி மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தினார்.<br>**மொழிப்பற்று**<br>பல மொழிகளைக் கற்றிருந்த பாரதி "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழின் சிறப்பை எடுத்துரைத்தார்.<br>**நாட்டுப்பற்று**<br>பாரதத் தாயின் அடிமைத்தனத்தை தகர்த்தெறிய இவர் எழுதிய பாடல்கள் இளைஞர்களைவீறு கொண்டு எழச் செய்தது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் மேடைகளிலும் வீதிகளிலும் இவருடைய பாடல்களையே பாடினார்கள். சமுதாயத் தொண்டு சாதிக் கொடுமைகள், பெண்ணடிமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவை இந்நாட்டிலிருந்து விலக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். மதவெறிப் பிடித்து அலைபவர்களின் | 8 |

| | | |
|---|---|---|
| | போக்கினைக் கண்டித்தார்.<br>**படைப்புகள்**<br>பாரதியார் எண்ணற்ற கவிதை உரைநடை நூல்களைப் படைத்துள்ளார். குயில் பாட்டு. கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞானரதம், தராசு போன்ற எண்ணற்ற படைப்புகளைப் படைத்துள்ளார்.<br>**முடிவுரை**<br>வளமான வலிமையான பாரதத்திற்குத் தேவையான சிறந்த வழிகள் யாவும் அவருடைய பாடல்களில் உள்ளன. அவற்றை பின்பற்றினால் அவர் கனவு கண்ட பாரதத்தை நம்மால் உருவாக்க முடியும் | |
| | (அல்லது) | |
| | **கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.**<br>**முன்னுரை:**<br>கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்<br>கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்<br>எத்தொழில் எதுவும் தெரியாமல்<br>இருந்திடல் உனக்கே சரியாமோ?<br>என்று நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பாடியுள்ளார். கைத்தொழிலின் இன்றியமையாமையை உணர்த்தும் பாடல் வரிகள் இவை. இக்கட்டுரையில் கைத்தொழிலின் அவசியம் குறித்துக் காண்போம்.<br>**கைத்தொழில் வகைகள்**<br>நமது நாட்டில் கிராமங்களே பலவாக உள்ளன. கிராமங்களில் பெரும்பாலோர் பயிர்த் தொழிலையே செய்கின்றனர். பயிர்த் தொழில் செய்யும் விவசாயிகள் ஆண்டில் பல மாதங்கள் வீணே காலத்தைக் கழிக்கின்றனர். அவர்கள் அக்காலத்தில் பல குடிசைத் தொழில்களைச் செய்து, தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் மட்பாண்டங்கள் செய்தல், எண்ணெய் எடுத்தல். உணவுத் தொழிலுக்குத் தேவையான சில கருவிகளைச் செய்தல், நெசவுத்தொழில், பாய்பின்னுதல், கூடைமுடைதல், ஆடுமாடு, கோழி வளர்த்தல் போன்ற பல கைத்தொழில்களைச் செய்யலாம்.<br>**கைத்தொழிலின் தேவை**<br>காட்டுப் பகுதியில் உள்ளவர்கள் தேன் எடுத்தல், மரச்சாமான்கள் செய்தல் போன்ற தொழில்களைச் செய்து தமது வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் குடிசைத் தொழில்களை ஓய்வு நேர வேலையாக மேற்கொள்ளலாம் அல்லது முழுநேர வேலையாக மேற்கொள்ளலாம்.குடிசைத் தொழிலின் மூலம் ஆக்கப்படும் பொருள்களை அனைவரும் விரும்பி வாங்குகின்றனர். அவை அன்றாட வாழ்க்கைக்கு பயன்படுவதாக உள்ளன.அவை நாள்தோறும் பயன்படுத்தப்படுவதால் அவற்றின் தேவை மிகவும் அதிகமாகிறது. இத்தேவையை இடைவிடாத உற்பத்தியினால் நிறைவேற்றலாம்.<br>**பொருளாதாரப் பயன்**<br>ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டில் நடைபெறும் தொழில் வளத்தைப் பொருத்திருக்கிறது. தொழில்வளம் மிக்க நாடுகள் செல்வ செழிப்புகள் உள்ளதாக | 8 |

இருக்கின்றன.உதாரணமாக ஜப்பானில் உள்ள பெண்களும் தம் ஓய்வு நேரங்களில் பூவேலை செய்தல், பின்னுதல் போன்ற கைத்தொழில் செய்து வருகிறார்கள். ஆகையால் ஜப்பான் சிறுதீவுகளாக காட்சியளித்தாலும் செல்வச் சிறப்புடன் விளங்குகிறது.அவர்களைப் போலவே நாமும் உழைத்து நம்நாட்டை உயர்த்த கைத்தொழில் வேண்டும். இது இயந்திரத்தின் உதவியின்றி, சிறிதளவு பணத்தைக் கொண்டு கையால் செய்யப்படுவது. ஆகவே அனைவரும் இதனை எளிதில் மேற்கொள்ளலாம்.

**முடிவுரை**

எனவே மாணவர்கள், கல்விப் பயிற்சி காலத்திலேயே நெசவு தையல் போன்றவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் அவ்வாறு கற்றுக்கொண்டால் நாம் கற்ற கல்விக்கேற்ப வேலையில்லா காலங்களில் நம் பிழைப்புக்கான ஊதியத்தை பெறலாம்.காந்தியடிகள் கூறியது போல, நமது தேவையை நாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அயலார் கையை எதிர்பார்க்காமல் சுயசார்பு உடையவர்களாக வாழ கைத்தொழில் உதவும்.

| ஆக்கம் | |
|---|---|
| இராஜ.வேல்முருகன்<br>நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர்,<br>வேப்பந்தட்டை வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெ. ஜெயராமன்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621101. |

www.Padasalai.Net